பத்தியை எண்ணிட்டுச் சரியாக நிரல்படுத்துக.

**நான் ஒரு மிதவை**

| | |
|---|---|
| | ஒருநாள் சிவாணி என்ற சிறுமி தன் குடும்பத்தினருடன் அக்கடற்கரைக்கு வந்தாள். தொலைவில் இருந்து, அவள் என்னையே நோட்டமிட்டாள். என் அழகு காந்தம் இரும்பைக் கவர்வது போல் அவளைக் கவர்ந்தது. உடனே, கடைக்கு வந்த அவள் தன் அம்மாவிடம் என்னை வாங்கித் தரும்படி ஒற்றைக் காலில் நின்றாள். அவள் அம்மாவும் கடைக்காரிடம் பணத்தைச் செலுத்தி என்னை வாங்கிக் கொடுத்தார். |
| | நீச்சல் தெரியாத சிறுவர்களின் உற்ற நண்பன் நான். நீச்சல் தெரியாத சிறுவர்கள், நீரில் குளித்து மகிழ என் உதவியை நாடுவர். நீரில் மூழ்காமல் சிறுவர்களைப் பாதுகாப்பது என் கடமையாகும். ஆம், நான் ஒரு மிதவை. நான் நீரில் மிதப்பதால் என்னை மிதவை என்று அழைப்பர். என் பெயர் சுவான். வட்ட வடிவத்தில் என் உடல் அமைந்திருக்கும். நான் பல வண்ணங்களில் காட்சியளிப்பேன். நான் நீரில் மிதப்பதற்கு ஏதுவாக இருக்க என்னுள் காற்றும் நிரப்பப்பட்டிருக்கும். |
| | என்னைப் பெற்றுக் கொண்ட சிவாணி மிகவும் உச்சிக் குளிர்ந்தாள். மறுகணமே என்னைத் தன் உடலில் மாட்டிக் கொண்டு கடல் நீரில் இறங்கினாள். நீச்சல் தெரியாத அவளுக்கு நான் நீரில் மிதக்க கை கொடுத்தேன். கடலில் உல்லாசமாகக் குளிக்க செல்லும் போதெல்லாம், அவள் என்னை மறந்ததில்லை. அதுபோல அவள் நீரில் மூழ்காமல் இருக்க நான் அவளுக்கு உறுதுணையாக இருந்து வருகிறேன். |
| | அக்கனவுந்து எங்களைச் சுமந்து கொண்டு பினாங்கு தீவை நோக்கி பயணித்தது. பல மணி நேரப் பயணத்திற்குப் பின் நாங்கள் பினாங்கு தீவை அடைந்தோம். அங்கு நாங்கள் பல கடைகளுக்கு விநியோகிக்கப்பட்டோம். நான் என் நண்பர்களைப் பிரிந்து, பத்து பிரங்கி எனும் கடற்கரையின் அருகிலுள்ள கடையை வந்தடைந்தேன். அக்கடையின் ஊழியர் ஒருவர் என் மேல் இருபது ரிங்கிட் எனும் விலைப்பட்டையை ஒட்டினார். |
| | நான் மலாக்காவில் புகழ்பெற்ற ஒரு தொழிற்சாலையில் பிறந்தேன். அங்கு என்னுடன் ஆயிரக்கணக்கான நண்பர்களும் உருவாக்கப்பட்டனர். முழு உருவம் பெற்ற எங்களை அத்தொழிற்சாலையின் ஊழியர்கள் ஒரு பெட்டிக்குள் அடைத்தனர். பின்னர் எங்களை ஒரு கனவுந்தில் ஏற்றினர். |

LIVEWORKSHEETS